சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001.

தேதி: 09.04.2026.

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 02/2026 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-10 |
| சாட்சியின் பெயர் | : | சக்திபாலன் |
| தந்தை பெயர் | : | முருகேசன் |
| கிராமம் | : | கீழ்வேளூர் |
| தாலுக்கா | : | கீழ்வேளூர் |
| தொழில் | : | திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை உதவி பேராசிரியர் |
| வயது | : | 37 |

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்பொழுது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.11.2025-ம் தேதி நான் பணியில் இருந்தபோது முகந்தனூரை சேர்ந்த வீரையன்

மகன் அ.சா.1 அன்புச்செல்வன் என்பவர் உள்நோயாளியாக இருந்த அவரை நான் பரிசோதித்தபோது அவருக்கு தலையின் வலதுபுறம் 1 X 1 X 0.5 செ.மீ அளவில் கிழிந்த காயமும், இடது தோள்பட்டை மற்றும் இடது முட்டியில் வலியும் இருப்பது கண்டறியப்பட்டது. மேலும், அவரது காயங்களுக்கு சிகிச்சையளித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று காயச்சான்று வழங்கினேன். அந்த காயச்சான்று **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

அ.சா.1 அன்புச்செல்வன் சிகிச்சைக்காக சேர்ந்த மறுநாளே என்னை போலிசார் விசாரித்தார்கள் என்று சொன்னால் ஆமாம். என்னை விசாரித்த போலிசாரின் விபரம் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. கூட்டமாக இருக்கும் கடைத்தெருவில் தள்ளுமுள்ளு ஏற்பட்டு அ.சா.1 தானாக கீழே விழுந்து அருகில் இருந்த இரும்பு கம்பி வேலியின் மீது விழுந்தால் மேற்படி முதல் விசாரணையில் சொல்லியுள்ள காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.04.09 18:37:03 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.